# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1998 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, சிறி லங்கா கொல்பிங் சபை (கூட்டிணைத்தல்) சட்டம்

---

(1998, யூன் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1998, யூன் மாதம் 19 ஆந் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 6.50** **தபாற் செலவு : ரூபா 2.50**

# 1998 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சிறி லங்கா கொல்பிங் சபை (கூட்டிணைத்தல்) சட்டம்

[1998 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.– ஓ. 5/96

## சிறி லங்கா கொல்பிங் சபையைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்

"சிறி லங்கா கொல்பிங் சபை" என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான ஒரு சபை, அதன் உறுப்பினர்களால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க, சொல்லப்பட்ட சபையுடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுற நிறைவேற்றி கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இதற்கு முன்னர் உருவாக்கப்பட்டுள்ள தாதலாலும் ; முன்னுரை.

சொல்லப்பட்ட சபை, எக்குறிக்கோள்களுக்கும் கருமங் களுக்குமாக உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள் களையும் கருமங்களையும் அது இதுவரையில் வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக் கானதாகவிருக்குமாதலாலும் ;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1998 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, சிறி லங்கா கொல்பிங் சபை (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும், (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சிறி லங்கா கொல்பிங் சபையில் உறுப்பினர்களாகத் தற் போதுள்ளவர்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத் தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக்கொள்ளப்படுப வர்களுமான அத்தகையோரான அத்தகைய ஆட்களும் "சிறி லங்கா கொல்பிங் சபை" என்னும் பெயரின் கீழும் மகுடத்தின் கீழும் இடையறா வழியுரிமைகொண்ட ஒரு கூட்டி ணைக்கப்பட்ட குழுவாய் இருத்தல் வேண்டும். (இதனகத் துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்துடன் எல்லா நீதிமன்றங்களிலும் அப்பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண் டிருத்தல் வேண்டும். சிறிலங்கா கொல்பிங் சபையைக் கூட்டிணைத்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளியிடப்படுகின்றது :-

(அ) இலங்கைப் பிரசைகளிடையே சாதி, சமய, இன ஒருமைப்பாட்டை நிலைநாட்டல் ;

(ஆ) இலங்கையில் ஐக்கியம், சமாதானம் என்பவற்றை ஏற்படுத்தும் மனித சமய மாண்புகளைப் பேணி வளர்த்தல். இதற்காக பலதரப்பட்ட சமய மரபுகளைத் தழுவுவோர் மத்தியில் கலந்துரையாடல்களை ஊக்குவித்தல் ; அத்துடன்

(இ) சமுதாயத்துக்குப் பயனுள்ள எல்லா வகையினதான சேவைகளை ஆரம்பித்தல் ;

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

4. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், எழுத்திலான வேறேதேனும் சட்டத்திற்கும் அமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றில் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும், செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும், கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள், வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களைக் கடன் எடுக்கவும் அல்லது திரட்டவும், அன்பளிப்புகளையும், கொடைகளையும் பெறவும் அல்லது சேகரிக்கவும் அதன் நிதிகளை முதலீடு செய்யவும், செலவுசெய்யவும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர்களையும் வேலைக்கமர்த்தல், வேலைகளிலீடுபடுத்தல், வேலைநீக்கஞ் செய்தல் ஆகியவற்றுக்குமான தத்துவங்களும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு இணங்க தெரிவுசெய்யப்பட்ட நிறைவேற்றுக்குழு ஒன்றினால் நிருவகிக்கப்படல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுக்குழு இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கும் சபையின் நிறைவேற்றுக்குழுவாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

6. (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்திலும், சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டுக்குக் குறையாத பெரும்பான்மை வாக்குகளைக் கொண்டும், பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்குமாக அல்லது எவற்றுக்காகவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :—

(அ) உறுப்பாண்மையை வகைப்படுத்தல், அவர்களைச் சேர்த்தலும் அவர்கள் விலகுதலும் அவர்கள் பதவி நீங்குதலும் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவிதாங்குநர்களின் பதவி விலகல், பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல், அத்துடன் அவர்களின் தத்துவங்களும், கடமைகளும் நடத்தையும் ;

(இ) கூட்டுத்தாபனத்தினதும் நிறைவேற்றுக் குழுவினதும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் அவர்களின் தத்துவங்களும், கடமைகளும் நடத்தையும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் தத்துவங்களும் நடத்தையும் கடமைகளும் பணிகளும் ;

(உ) கூட்டுத்தாபனத்தினதும் நிறைவேற்றுக் குழுவினதும் கூட்டங்களிற் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறையும், அக்கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும் அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்களும் அவை நடைபெறும் நேரங்களும் இடங்களும் நிகழ்ச்சிநிரலும் அவற்றின் கூட்ட நடப்பெண்ணும் அதில் அலுவல்களை நடாத்துதலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமைசெய்தலும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் நிதிகளுக்குப் பொறுப்பாயிருத்தலும், அதன் கணக்குகளைப் பேணிக் கணக்காய்வு செய்தலும் ; அத்துடன்

(எ) பொதுவில் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்தலும், அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதிகள், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒரு விதியைப் போன்று அதேபோன்ற கூட்டத்திலும் அதே முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், ஒழிக்கப்படலாம் அல்லது அதற்கெதுவும் சேர்க்கப்படலாம்.

(3) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலிருக்கும் சபையின் விதிகள், இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணானவையாயிராத அளவுக்கு இப்பிரிவின் கீழாக்கப்பட்ட விதிகளாகக் கருதப்படல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.

7. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபன மானது, ஏதேனும் கொள்வனவு, அன்பளிப்பு, நன்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்ற வகையாகவோ வேறு வகையாகவோ அதற்குரித்தாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளலாம், வைத் திருக்கலாம் என்பதுடன் அத்தகைய ஆதனம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆதனம் எதனையும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக் கமைய விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனம் சட்டரீதியாக இயலுமான தாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டும்.

8. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று சபைக்குள்ள எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் கொடுத்துத் தீர்க்கப்படல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று சபைக்கு வருமதியான எல்லாக் கடன்களும் சபைக்குச் செலுத்தப்படற்பாலனவையான ஒப்பப் பணங்களும், உதவுதொகைகளும் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படலும் வேண்டும். சபையினால் செலுத்தப்படற்பாலனவும் அதற்குச் செலுத்தப்படற்பாலனவுமான கடன்கள்.

9. (அ) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாகவிருத்தல் வேண்டும். கணக்காய்வும் கணக்குகளும்.

(ஆ) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(இ) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது –

(i) இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**10.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது கூட்டுத்தாபனத்தின் தலைவர் அல்லது அவரின்றேல் உபதலைவரினதும் பொருளாளரினதும் முன்னிலையிலன்றி, எத்தகையதுமான சாதனத்திலும் இடப்படலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடல் வேண்டும்; அத்துடன் அத்தகைய கையொப்பமிடுதல் சாட்சியொருவராக எவரேனும் ஆள் கையொப்பமிடுவதற்குப் புறம்பானதாயிருத்தல் வேண்டும்.

குடியரசினதும் எனையோரினதும் உரிமைகளைப் பேணல்.

**11.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், குடியரசினது உரிமைகளையேனும் அல்லது அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்கள் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**12.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.